பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
29 06 2024 6 45
சனிக்கிழமை காலை

# TUNE

தலைப்புச் செய்திகள்

1. ரத்து செய்யப்பட்ட மற்றும் ஒத்திவைக்கப்பட்ட தேர்வுகளுக்கான புதிய தேதிகளை தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

2. மாணவர்களின் நலன் கருதி தேசிய அளவில் நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

3. தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

4. சென்னை, திருச்சி, தஞ்சாவூரில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப் பகுதிகளில் சிதிலமடைந்துள்ள 6 ஆயிரத்து 746 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டமானம் செய்யப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

5. உலகக்கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

*--- இனி விரிவான செய்திகள் ----*

**<<<<>>>>**

ரத்து செய்யப்பட்ட மற்றும் ஒத்திவைக்கப்பட்ட தேர்வுகளுக்கான புதிய தேதிகளை தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

இதுகுறித்து தேசிய தேர்வு முகமை நேற்று வெளியிட்டுள்ள ஒரு செய்திக்குறிப்பில், இம்மாதம் 18ஆம் தேதி நடைபெற இருந்த **UGC – NET** தேர்வை கடைசி நேரத்தில் மத்திய கல்வி அமைச்சகத்தின் அறிவுறுத்தலின் பேரில் ரத்து செய்யப்பட்டது.

ரத்து செய்யப்பட்ட இந்தத் தேர்வு ஆகஸ்ட் மாதம் 21 மற்றும் செப்டம்டம்பர் 4ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இளநிலை ஆராய்ச்சி படிப்புகளுக்கான உதவித்தொகை மற்றும் உதவிப்பேராசிரியர்கள் நியமனம் மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளுக்கான சேர்க்கைக்கான தகுதியை நிர்ணயிக்கும் தேர்வாகும்.

**CSIR – UGC NET** ஒருங்கிணைந்த தேர்வு அடுத்த மாதம் 25ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை நடைபெறும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

நான்கு ஆண்டுகள் ஒருங்கிணைந்த ஆசிரியர் கல்வி திட்ட சேர்க்கைக்கான **NCET** எனப்படும் தேசிய பொது நுழைவுத் தேர்வு அடுத்த மாதம் 10ஆம் தேதி நடைபெறும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

மேலும் விவரங்களுக்கு மாணவர்கள் **www.nta.ac.in** என்ற வலைதள முகவரிக்குச் சென்று அறிந்துகொள்ளலாம் என்று தேசிய தேர்வு முகமை கேட்டுக்கொண்டுள்ளது.

அகில இந்திய ஆயுஷ் முதுகலை நுழைவுத் தேர்வு ஏற்கனவே திட்டமிட்டபடி அடுத்த மாதம் 6ஆம் தேதி நடைபெறும் என்றும் அந்த முகமை அறிவித்துள்ளது.

<<<<>>>>

தேசிய தேர்வு முகமையில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் தொடர்பாக மாணவர்கள், பெற்றோர் தங்களது கருத்துகளையும், ஆலோசனைகளையும் தெரிவிக்கலாம் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

மாணவர்கள் மற்றும் பெற்றோர் தங்களது கருத்துகளை இதற்காக உருவாக்கப்பட்ட **innovateindia.my.gov.in** என்ற இணையதள முகவரியில் தெரிவிக்கலாம் என்று அரசு கூறியுள்ளது.

தேர்வின் புனிதத் தன்மையை கருத்தில்கொண்டு தேசிய தேர்வு முகமையில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்க ஏற்கனவே மத்திய அரசு இஸ்ரோ முன்னாள் தலைவர் திரு. கே. ராதாகிருஷ்ணன் தலைமையில் குழு ஒன்றை அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

மாணவர்களின் நலன் கருதி தேசிய அளவில் நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர் வலியுறுத்தியுள்ளார்.

தொழிற்கல்வி படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை 12ஆம் வகுப்பு மதிப்பெண்கள் அடிப்படையில் மட்டுமே இருக்க வேண்டுமே தவிர, தனி நுழைவுத் தேர்வு அடிப்படையில் இருக்கக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய தேர்வு முறை மாணவர்களுக்கு தேவையற்ற கூடுதல் மன அழுத்தத்தை ஏற்படுத்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு அளிக்கக் கோரும் சட்டப்பேரவை தீர்மானத்தின் நகல் பிரதமருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அது குறித்து பிரதமர் விரைந்து முடிவெடுக்க வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நீட் தேர்வில் இருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்கக் கோரும் கோரிக்கை குறித்து நாடாளுமன்றத்தில் குரல் எழுப்ப வேண்டும் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்திக்கும் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதே கோரிக்கையை மத்திய அரசிடம் வலியுறுத்துமாறு கேரளா, தெலங்கானா, கர்நாடகா, பஞ்சாப் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஆளும் 8 மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கும் முதல்வர் கடிதம் எழுதியுள்ளார்.

<<<<>>>>

தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கான சட்டத்திருத்த மசோதா சட்டப்பேரவையில் இன்று அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

சட்டப்பேரவையில் நேற்று உள்துறை மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தில் பேசிய பாமக சட்டமன்ற குழுத்தலைவர் திரு. ஜி.கே. மணி, கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்தி 60க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தது தொடர்பாக சில கருத்துகளை தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்ட முதலமைச்சர், உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய பொருட்களை காய்ச்சுதல், விற்பனை செய்வது போன்ற குற்றங்களுக்கான தண்டனை போதுமானதாகவும், கடுமையானதாகவும் இல்லை என்பதால் இந்தக் குற்றங்களுக்கு வழங்கப்படும் தண்டனையை கடுமையாக்கவும், இக்குற்றங்களை முற்றிலும் தடுக்கவும் ஏற்கனவே உள்ள சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

<<<<>>>>

தருமபுரி மாவட்டத்தில் கருவில் உள்ள சிசுவின் பாலினத்தை கண்டறிந்து தெரிவித்ததாக 4 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

கருவில் உள்ள பாலினத்தை தெரிவிக்கும் சட்டவிரோத கும்பல் இயங்குவதாக வந்த தகவலையடுத்து, தருமபுரி மாவட்ட ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் திருமதி சாந்தி தலைமையிலான குழுவினர் காவல்துறையுடன் இணைந்து பெண்ணாகரம் ஒன்றியம் நெக்குந்தி பகுதியில் நேற்று திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது முத்தப்பா நகரில் சிறிய மலை மீது அமைந்துள்ள ஒரு வீட்டில் ஸ்கேன் இயந்திரம் பொருத்தப்பட்ட நடமாடும் வாகனம் ஒன்றில் கர்ப்பிணிப் பெண்களுக்கு கருவில் உள்ள பாலினத்தைக் கண்டறியும் செயல்கள் நடைபெற்று வந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து கள்ளக்குறிச்சியை சேர்ந்த 3 பேர் உட்பட 4 பேரை கைது செய்த காவல்துறையினர், இவர்களுடன் தொடர்புடைய மற்றவர்களை தேடி வருகின்றனர்.

<<<<>>>>

சென்னை, தஞ்சாவூர், திருச்சியில் உள்ள நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப் பகுதிளில் சிதிலமடைந்துள்ள 6 ஆயிரத்து 746 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஆயிரத்து 146 கோடி ரூபாய் செலவில் மறுகட்டமானம் செய்யப்படும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் சட்டப்பேரவையில் விதி 110-ன் கீழ் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அதில் கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் 29 ஆயிரத்து 439 அடுக்குமாடிக் குடியிருப்புகளும், ஒரு லட்சத்து 70 ஆயிரத்து 462 தனி வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

172 திட்டப் பகுதிகளில் 79 ஆயிரத்து 94 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் 89 ஆயிரத்து 429 தனி வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள், பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

திருப்பூர் மாநகராட்சிப் பள்ளி மாணவர்கள் பள்ளி வளாகத்தில் காய்கறிகளைப் பயிரிட்டு அவற்றை சத்துணவுக்கு வழங்கி வருகிறார்கள்.

நகர்ப்புற பள்ளி மாணவர்கள் விவசாயத்தை அறிந்துகொள்ளும் வகையில் இந்தப் பயிற்சியை மாணவர்களுக்கு அளித்தாக பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. சிவகுமார் கூறினார்.

(வாய்ஸ் பைட் - சிவகுமார் - 40 நொடிகள்)

சத்துணவுக்கு தேவைப்படும் காய்கறிகளை தாங்களே விளைவிப்பது, மகிழ்ச்சியளிப்பதாக மாணவர் ஒருவர் தெரிவித்தார்.

**<<<<>>>>**

*இருவரிச் செய்திகள்*

மங்கோலியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆளும் மங்கோலிய மக்கள் கட்சி மீண்டும் வெற்றி பெற்றுள்ளது.

------------

அமர்நாத் புனித யாத்திரை, ஜம்மு-கஷ்மீர் யூனியன்பிரதேசத்தின் பெஹல்காம் மற்றும் **Baltal** பகுதிகளில் இருந்து இன்று காலை தொடங்கியது.

------------

மேற்கூரை இடிந்து விழுந்தததால் தில்லியில் மூடப்பட்ட இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் சீரமைப்பு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அடுத்த மாதம் முதல், வாரந்தோறும் திங்கட்கிழமை பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறும் என்று மாவட்ட ஆட்சியர் திரு. பிரசாந்த் அறிவித்துள்ளார்.

------------

பிரதம மந்திரி ராஷ்ட்ரிய பாலபுரஸ்கார் விருதுக்கு திருப்பத்தூர் மாவட்டத்தில் தகுதியுடைய மாணவ – மாணவிகள் அடுத்த மாதம் 31ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் திரு. தர்ப்பகராஜ் தெரிவித்துள்ளார்.

------------

தூத்துக்குடி ரயில் நிலையத்தில் மூத்த குடிமக்கள் மற்றும் உடல்நலம் குன்றிய பயணிகளை ஏற்றிச் செல்ல பேட்டரி கார் சேவை தொடங்கப்பட்டுள்ளது.

------------

விழுப்புரம் மாவட்டத்தில் தேர்தல் நன்னடத்தை விதிகளை மீறி இருசக்கர வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட ஒரு கோடியே 7 லட்சம் ரூபாயை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

------------

சென்னை செங்குன்றத்தில் இருந்து 2 சரக்கு வாகனங்களில் ஆந்திராவுக்கு கடத்த முயன்ற 11 ஆயிரம் கிலோ ரேஷன் அரிசியை குடிமைப்பொருள் புலனாய்வு பிரிவினர் பறிமுதல் செய்தனர்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

பிரிட்ஜ்டவுனில் இந்தப் போட்டி இன்றிரவு 8 மணிக்கு தொடங்க உள்ளது.

ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இரு அணிகளும் இதுவரை நடைபெற்றுள்ள 26 ஆட்டங்களில் மோதியுள்ளன.

அதில் இந்தியா 14 போட்டிகளிலும், தென்னாப்பிரிக்கா 11 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளது. ஒரு ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

---------------

ஆசிய விளையாட்டுப் போட்டியில் யோகாவை சேர்க்க வேண்டும் என்று இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் பி.டி. உஷா தெரிவித்துள்ளதை வரவேற்பதாக மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>